# அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள். ஆனாலும், உன்னை மேற்கொள்ள மாட்டார்கள். 2 எரே 15 : 20

**உன்னை அரணான வெண்கலஅலங்கமாக்குவேன்.**

1991 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் தேதி இரவு 7 மணிக்கு T.V.G.M. அலுவலக ஊழியர் யாவரும் உபவாசித்து புதுமாத வாக்குத்தத்தத்திற்காக ஜெபித்தோம். இரவு 9–12 வரை நடு இரவு ஜெபம் நடைபெற்றது. வழக்கம்போல இரவு 12 மணிக்கு புது மாதத்திற்காக ஸ்தோத்திரம் செய்து, ஒவ்வொருவரும் வாக்குத்தத்த அட்டை எடுத்தோம். நானும் எடுத்தேன். வேதாகமத்தில் வைத்தேன். படிக்கவில்லை. மறந்துவிட்டேன்.

ஒருவாரம் கழித்து என்னுடைய தனிஜெப அறையில் 1991 டிசம்பர் மாத பத்திரிக்கை வாக்குத்தத்தத்திற்காக ஜெபித்துக் கொண்டிருக்கும் பொழுது, கர்த்தர் எனக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தையே உங்களுக்கும் கொடுக்க பாரப்படுத்தினார். ஆதலால் இந்த செய்தியை உங்களுக்கு எழுதுகிறேன்.

**உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்.அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள். ஆனாலும் உன்னை மேற்கொள்ளமாட்டார்கள்**

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள். யுத்தமே வராமல் போய்விட்டால் நல்லது என்று நினைக்கிற சகோதரியே, சகோதரனே, அப்படி நினைக்க வேண்டாம். அது வரும். எதிர்பாருங்கள்.

**பக்தன் பாடுகிறான்**

தண்ணீரை நீ கடக்கும் போது
கண்ணீரை அவர் துடைத்திடுவார்
வெள்ளம் போல சத்துரு வந்தால்
ஆவியால் கொடியேற்றிடுவார். என்பதாக

**இதைத்தான் ஏசாயா 59:19 சொல்கிறது**

வெள்ளம்போல் சத்துரு வரும்போது கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாக கொடியேற்றுவார் என்பதாக. அல்லேலுயா.

**உன்னை அரணான வெண்கலஅலங்கமாக்குவேன், உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்**

அவர்கள் உன்னிடம் எவ்வளவாய் போராடினாலும், பகைத்தாலும், வெறுத்தாலும், சூழ்ச்சி செய்தாலும், திட்டமிட்டு செயல்பட்டாலும், கண்ணீவைத்தாலும், நய வஞ்சகம் செய்தாலும், ஆசைக்காட்டி மோசம் போக்க நினைத்தாலும்

**உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்– அல்லேலுயா**

**ஏன் தெரியுமா ? தேவன் உன்னை அரணான வெண்கல அலங்கமாக்கியிருக்கிறார்.**

**நான் பெலவீனன்** என்று சொல்லும் ஊழியக்காரனே, ஊழியக்காரியே விசுவாசியே, போதகரே,

இனிமேல் இந்த வார்த்தையை சொல்லாதிரும். வேண்டாம் வேண்டாம், சொல்ல வேண்டாம்.

**யோவேல் 3:10 சொல்கிறது** : பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக என்பதாக.

**இதைத்தான் பரிசுத்த பவுல் சொன்னார் பிலிப்பியர் 4:13**

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு, என்பதாக. அல்லேலுயா

உன்னுடைய பெலன் குப்பைதான். நீ ஒரு மண்பாண்டம் தான். ஆனால் உனக்குள் இருப்பவர் யார் தெரியுமா ?

**1யோவான் 4:4 சொல்கிறது.**

உலகத்திலிருக்கிறவனிலும் உங்களில் இருப்பவர் பெரியவர் இரண்டு கரங்களையும் தட்டி கர்த்தரை ஸ்தோத்தரிப்போமா ?

**உன்னை மேற்கொள்ளமாட்டார்கள்**

**எரேமியா 15:20 சொல்வதை வாசிப்போம் : உன்னை ரட்சிப்பதற்காகவும், உன்னை தப்புவிப்பதற்காகவும் நான் உன்னுடனே இருக்கிறேன் – என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

அகப்பட்டுக்கொண்டோமே என்று அங்கலாய்க்கும் சகோதரனே.

மானம் பறிபோகிறதே என்று வேதனையுறும் சகோதரியே, உன்னை தேற்றுவதற்காகவே தேவன் இந்த வார்த்தைகளை அனுப்புகிறார்.

**எரேமியா 31:16** : உன் கிரியைக்குப் பலனுணடு என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**இந்த மாதம் அடிக்கடி எரோமியா 15 : 20 யை வாசியுங்கள்.**
**அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள்,**
**ஆனாலும், உன்னை மேற்கொள்ள மாட்டார்கள். ஆமென்.**